நும்பழடைக் கவித்திரட்டு

உ

சிவமயம்.

கும்பாபிடேகக் கவித்திரட்டு.

இது,

கண்டனூர்

நா. பெ. நா. மு.

முத்துராமையா

அவர்களாலியற்றப் பெற்று

கோத்தமங்கலம்.

சி. அ. சு.

செல்லப்பசெட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1913.

உ
சிவமயம்.

கும்பாபிடேகக்
கவித்திரட்டு.

கடவுள் வணக்கம்.

அண்டர்கள் பரவுங் கண்டனூ ரதனி லருள்வடி வாகவே மடத்திற், கண்டிடுஞ் செல்வக் களிறெனுங் கடவுள் கார்மயில் வாகனக் கடவுள், தொண்டர்கட் கருளு மங்கயற் கண்ணி சுந்தரேஸ் வரரெனுஞ் சோதி, வண்டமிழ் நாக லிங்கதே சிகனை வணங்கிமுப் போதுப் வாழ்த் திடுவாம். (1)

நூற்பயன்.

செய்யுட் டிரட்டின் சிறப்பை யுணர்ந்தக்காற்
கையிற் கனிபோலக் காணலாம்—வையகத்திற்
கும்பாபி டேகங் குறிப்பான சங்கதிகள் (2)
நம்பும் படிநடந்த நாள்.

ஈஸ்வர௵

மதுரை.

ஏர்கொண்ட கொல்லமாண் டாயிரத் தைம்பத் திரண்டிலுக்கேற்ற தான, ஈசுவர வருஷமுறு தைதேதி யிருபதோ டாறினிற் புந்திவார, மியல்பா யமைந்தநன் னாளிலே பாண்டிநா டெனுமதுரை நகரமுற்ற, வெழிலான திருவால வாய்க்கோயின் மீனாட்சி சுந்தரர் திருப்பணியினிற்,—பார்கொண்ட கர்ப்பக்கிரகமீதி லுறுகின்ற பண்புள விமானமதனைப், பரிவுடன் குட்டையை யாவுமே தன வணிகர் பாலித்த பொருளைவாங்கிப், பாங்காக வேசொன்ன மதனை லியற்றியும் பார்ப்பவர்கள் மனதுவக்கப், பத்தியிற் றிகழ்நந்தி மண்டபந் தனையுமணி யொட்டிமண் டபமதாக்கச்,—சீர்கொண்ட வயிநாக வணிகர்மற் றுளதான சீரண மெலாமகற்றித், திடமான கல்லா லமைத்துமே கல்யாண மாலதுஞ் செய்துபின்னர்ச், செகமெலாம் புகழ்ராசீ கோபுர மனைத்துஞ் சிறக்கவே புதிய தாக்கித்

திகழ்வெள்ளி தங்கமத னுல்வாக னங்களைச் சீர்செய்து நகைய ணைத்துந்;—தார்கொண்ட மூர்த்திகட் கியல்பா யமைந்திடப் பழைய வைப் புதியதாக்கத், தனவணிகர் யாவருங் கூடியே கும்பாபிடேக முஞ் செய்துமன்றே, தகைமையாய்ப் பஞ்சமூர்த் திகள்பவனி வந்தி டச் சகலவை பவமுமோங்கக், தாத்துட னடாத்தியும் மானந்த முற்றதைச் சாற்றுதற் கெளியதாமோ. (1)

வெகுதானிய௵

கண்டனூர்.

மன்னும்வெகுதானியாவருடமுறும் வைகாசிமாதமிருபத்து நாலோ டுன்னுமே தேதியினிலே நாகலிங் கையன்மெய் யுரமானவடியார்களு மின்னுநற்செல்வவைங் கரணிருக்கின்றமே தார்வேதாந்தமடமியற்றிப் பன்னுகிரகப்பிரவேசமது செய்துதன பதியா யிருந்தனர்களே (2)

பிரமாதி௵

கல்லாங்குடி.

சீர்கொண்ட பிரமாதி வருடமதின் மகரமாந் திங்களிற் பதி னைதாந், தேதியொடு சோமவா ரம்புனர் பூசஞ் சிறந்தநட் சத்தி ரத்திற்,—சீர்கொண்ட தனவணிக ரனைவருங் கூடிநற் பெருமை யாம் பொருள்கொடுக்கப், பெற்றுமே நாகலிங் கையனும் வணிகனும் பெரிதான கருணைபுரி,—சீர்கொண்ட மாலயன் புகழ்திருப் பாகனார் தேவியா ரிருவரோடுஞ், சீரா யிருப்பதற் கிணையிலாப் பணிகளுஞ் செம்மையாத் தானமைத்துப்,—பார்கொண்ட வுயிர்களெல் லோரும் பணிந்திடப் பரவுதும் பாபிடேகம், பண்பாய் நடத்தியடி யாருடன் கூடிப் பரிந்துமகிழ் வுற்றனர்களே. (3)

பார்த்திப௵

சாக்கை.

அன்பான சாலிவா கனமாஞ் சகாப்தமது வாயிரத் தெண்ணூற் றெட்டினி, லன்பான பார்த்திபநல் வருடமுந் தைமாச மானநவ தேதியதனி, லழகான பௌரணை மீனலக் னம்பூச மானதொரு புதன்வாரமு, மாகின்ற ராசத வேளையாஞ் சுபதினத் தன்புடைய

பாண்டிநாட்டிற்,—றன்பான குஷ்டநோய் சோழற் ககற்றியருள்
சுயமான பிரமதீர்த்தஞ், சூழ்கின்ற வீரைவன மானவழ காபுரித்
தூயவொரு நாமமுற்றுச், சுகமான சாக்கையிற் றேவைநகரிற்சிறந்
தொளிர்கின்ற வீரப்பனற், சுதன்ராம லெட்சுமண செட்டியவ னாற்
பெற்ற தூயபுத் திரர்களாலே,—தென்பா யமைத்தநற் கல்லா லிய
ற்றுந் திருப்பணிக் கோபிலுற்ற, தேவியுமை யம்பிகை தன்னோடு
மானந்த சின்மய சுயம்புவான, திகழ்வீர சேகர ரானபர மேஸ்வரன்
சேர்ந்தே தவதைகளுக்குஞ், சிவகா ருண்யமுத னன்குமே குடி
கொண்ட செயமுடைய செல்வருக்கு,—நண்பான முப்பத் திரண்
டறம் நாளுந் நடத்துசீர் வணிக ரெல்லா, நலமான வஷ்டபந் தனமு
தற் கும்பாபி டேகமு நடாத்திநின்ற, நன்மையைக் கூறுதற் காதி
சே டன்னுக்கன் னாவா யிரந்தினாலே, நாளா யிரங்கள்சென் றாலு
முடி யாதென்னி னன்கூற வெளியதாமோ. (4)

பார்த்திப வருஷ

காளையார் கோவில்.

சுயமான கலியுகம் நாலாயிரத்துத் தொளாயிரத் தெண்பதே
ழிற், சூழ்கின்ற பார்த்திபநல் வருடத்தின் மகரமதி தூயபதின்
மூன்றுதேதி, சுத்தமாம் பானுவா ரத்தினுத் திரம்வருஞ் சொல்
விடய லக்கினஞ்சேர், சுபதினத் துயர்வான பாண்டிநாட் டிற்சிறந்
தொளிர் கின்ற யானைமடுவோ,— டியலான காளையார் கோவிலென்
றிசைபெறுந லெழில்கானப் பேரமர்ந்த, வினியநற் சுயமான காளீச
மூர்த்தியோ டினியகாஞ் சுவர்னவல்லி, யோர்வேங்க டாசலச் செட்டி
புதுமையதா யியற்றிடும் பணியிலன்பா, யின்புட னுவந்தெழுந் தரு
ளுநம்சோமேச விறைவற்கு மிடதுபங்கில்,— நயமாஞ் சவுந்தர
நாயகிக் குந்தேவ நகரசு ராமசாமி, நாமமுறு வணிகன்முத லனை
வருங் கூடியெங் நாளுமிஃ தரிதென்னவே, நலமான மந்திரங் கிரி
யைபா வனையெலா மியாதுமொரு குறைவின்றியே, நன்மையா
யஷ்டபந் தனநடப் பித்தபுகழ் நான்கூற வெளிதாகுமோ,— செய
முடைய காளீசர் பொன்வல்லி கோவிற் றிருப்பணி பழமையாலே,
சீரணோத் தாரணஞ் செய்துமேற் கும்பாபி சேஷகமுஞ் செய்வதற்
குச், செல்வர்கள் யாவரோ வவர்கட்கு மேன்மேலுஞ் செயமதுண்

டாகியின்பச், சிவபதம் மடைவதிற் சந்தேகமில்லெனச் செப்பினே
னறிகயாதோ, (5)

சர்வசித்துவரு

திருநெல்வேலி.

அழகான வாயிரத் தறுபத் திரண்டாவ தாண்டினிற்சருவசித்தென்
றுனவற் சரமிதன மாதநற் றேதிதா னையைந்து நான்கு மான
வபரபட் சஞ்சோம வாரமுத் ரட்டாதி யானதொரு சஷ்டிதிதியு
மமைவான கன்னிகா லக்கினஞ்சாத்துவிகமானதொரு சுபதினத்திற்
றழகுவான பாண்டியிற் றுப்பிர பரணிசூழ் சாலிவாடீபுரமெனச்
சாற்றுநெல் வேலியாம்க்ஷேத்திரந்தன்னிலேசச்சிதானந்தவடிவாய்த்
தற்பர சுயம்புவாஞ் சாலிவாடீஸ்பரர் தகைமைபெறு மூலநாதர்
தன்னிகரில் காந்திமதி யம்மையொடு மனவரக தானநா தர்க்குநல்ல
வளமான பிரபுக்கள் பெரியோர்க ளடியார்கள்மானேசர் தர்மகர்த்தர்
வளம்பெறு கமிட்டியா ரனைவருமாராய்ந்து வயமான கோயின்மிக்க
மானபதினையாயிரம்பொனுமெடுத்துமேல்வந்தபொருளியாவும்வாங்கி
வண்மையாஞ் சாத்திர விதிப்படிக் கேயஷ்டபந்தனம் மதனினோடு
முளதான செடிபந்த னத்தொடுங் கும்பாபி ஷேகமும் முரிமையாக
வுலகங்க ளூர்ப்பும் படிக்கே நடத்தின வுண்மையாம் வைபவத்தை
யுயிர்களெல் லாமுவந்தன்புடன்வணங்கியேயுள்ளங்களித்துநின்ற
வுயர்வானவ்திசயமனைத்தையும்மயனுலுரைக்கவும்மெளியதாமோ.

சர்வதாரி வரு

கோவிலூர் வித்தியாசாலை.

வண்மையா கியசர்வ தாரிவரு டங்கொண்ட மாதமாஞ் சித்தி
ரையினில், வளர்தேதி யெட்டிற் சிறந்ததோ ரிமளம் வாழ்கின்ற
வணிகர் தம்முள்,—திண்மையராஞ் செல்லப்ப செட்டிமக வாஞ்சுப்
பிர மணியநற் புத்திரர்களுஞ், சின்மையா னந்தாத்து விதரூப மருள்
கின்ற செவ்வி தாங் கோவிலூரி,—உண்மையாங் கொற்றவ னீசனற்
றிருநெல்லை யுயர்குரு வனுக்ர கத்தா, லுன்னத மாகவித் தியாசாலை
கட்டியே யுள்ளக் களிப்பினுடனே,—தண்மையாங் கிரகப்பிரவேச
மது செய்யவே சகவடி யாரும்வந்து, சந்தோஷ மாகச் சிறப்பித்த
பெருமையைச் சாற்றுதற் கெளியதாமோ. (7)

சர்வதாரி ௵

கோனாப்பட்டு.

நற்சருவ தாரிவரு டந்தனில் வைகாசி மாதநற் றேதியாறி, னயமான குருவார மமரபக் கஞ்சஷ்டி மிதுனநற் பூசநாளில்,— விற்பரவு தொண்டைமான் சீமைசேர்ந் துயர்வுநனி மேவுகோனாபட் டினில், மினிர்வணிகர் கூடித் திருப்பணி யியற்றியே மேன்மைபெறு சுந்தரேசன்,— தற்பரவு மீனாட்சி யம்மையொடு மற்றுமுள சகல மூர்த் திகளுமன்பாய்த்,தாபித்து மங்குள்ள வணிகரெல் லோர்களுஞ் சந்தோஷ முடனுவந்தே,—யற்புதம தாயஷ்ட .பந்தனத் தோடு செடி பந்தனஞ் செய்து மப்பா, லருமையாங் கும்பாபி ஷேகமு நடந்ததோ ருருமையைக் கூறலெளிதோ. (8)

கர௵

சிதம்பரம்.

ஆயிரத்தோ டெண்ணூற்றுத் தொண்ணூற்றொ ராம்வருட்
மேயகர வற்சரத்தின் மேடமா தந்தேதி
தூயநான் கினிற்புந்தி வாரமுநற் சுபமிதுன
நேயதிரு வாதிரைநாள் நேமமுள வணிகரெலாம். (9)

தில்லைதனின் நடராச தேவர்முதற் றேவர்கட்கு
மெல்லையுள கும்பாபி டேகமுமங் கினிமையதாய்
வல்லமையாந் தீக்ஷிதர்கள் வைதீக மாகவுமே
நல்லதின நடத்தினதை நான்கூற வெளிதாமோ. (10)

உள்ளங் களிக்கும் பொன்னிநாட் டுயர்வாய் விளங்கும் புலியூரில்
வள்ள லாகு நடராசன் விமான மதற்கு வணிகரெலாங்
கொள்ளுஞ் சொன்ன வோடிருபத் தோரா யிரத்தி னறுநூறு
கள்ளமின்றிச் செய்ததைக்கண் கோடிகாணக் காணுமதோ. (11)

சிற்சபையின் றாபியபி டேகமதைத் தெரிசிக்கச் சிவரெல்லா
மற்புதமண் டபங்களெல்லா மேறியுமவ் வசமேயா யகங்குளிர்ந்தே
நிற்புறுமெய்வாக்குமொத் துக்கண்டுகளித் ததையேவர்நிகழ்த்தக்கூடும்
விற்பனனென் றுரையாதிசேடனுமாயிரநாவால்விளம்பொணாதே. ()

சத்திரந்தானமைத்ததொருதவப்பேற்றாற்சாவன்னாவகையார்தாமு
முத்திநலஞ்சிதம்பரமென்றுணர்ந்தாங்குதம்மினத்தார்முழுதுங்கூடி
யத்தமது வேண்டுமட்டுஞ் செலவுகள்செய் தானந்த நடராசற்குப்
புத்தியாற் கும்பாபி டேகஞ்செய் திட்டதையார் பகர்வர் மாதோ.()

மாயிருஞா லம்படைத்த பிரமனார் வணிகர்தமை வகுத்ததற்குத், தூயபலன் கைமேலே தோன்றிடச்செய் தாரெதனாற் சொல்வா யென்னிற், கோயிலெனுந் தலத்திறைக்குக் கும்பாபி டேகமதைக் குறிப்பாய்ச் செய்தே, யாயிரக்கால் மண்டபத்திற் றெரிசனமும் பெறச்செய்த வடைவினாலே. (14)

கர ௵

ஆவுடையார்கோவில்.

முதன்மையுள கரவருடம் வைகாசி முதற்றேதி
புதன்கிழமை யானசுப தினமதனிற் புவியினிலே
சதமான பதமடையத் தக்கபெருந் துறைமேவும
இதமான வாத்மநா தக்கடவுட் கின்பமுடன். (15)

திருவாத வூரடிகள் செய்ததிருப் பணியதற்குப்
பரிவான வழகுமிகப் பணிசெய்து பான்மையுடன்
குருவான கடவுளுக்குக் கும்பாபி டேகமதுந்
திருவான வணிகர்கள்செய் சிறப்பையுமென் செப்புவதே. ()

கர ௵

கண்டனூர்.

சீரார் தருசெந் தமிழ்ப்பாண்டித் திருநா டதனிற் சிவபெருமான்
பேரார் தருநற் கண்டனூர் பெருக வளர்சீர் வணிகரெலாந்
தாரார் தருமெம் மீனாட்சி சுந்தரேசர் தாமகிழக்
காரார் தருமெய்த் திருக்கோயிற் கயிலை யிதுதா னெனக்கருத. (17)

ஆதி சேடன் முடிதழுவ வத்தி வார மமைத் ததன்மேற்
கோதி லாத வானக்கற் குன்று போலப் யடிய வைத்துச்
சோதி யான வரிகளொலாஞ் சுத்த படிக மெனச்சேர்த்தே
நீதி யாகத் தூண்வரிசை நிகழ நிலையி னிருமித்தே. (18)

அங்க மான போதிகைவைத் ததன்மே லொழுங்கா வுத்திரமும்
பங்க மில்லாப் பாவுகற்கள் படியக் கர்ப்பக் கிரகமுத
லெங்கும் வெளியாய்ச் சாளரங்க ளியற்றிப் பரிவா ரங்கட்குத்
துங்கத் திருமா ளிகையினிடைத் தூய்தாங் கோயில் களுமமைத்தே.

மண்ட பந்தா மனேகங்கள் வரிசை வரிசை யாயியற்றிச்
சண்ட பானு வுதயம்போற் றங்கத் தூபி கோபுரஞ்செய்
தண்ட முகடு வரைகீர்த்தி யளாவும் படிக்கன் பாய்முடித்து
வண்ட மிழ்தேர் மிக்கதிரு வணிக ரெல்லா மனமகிழ்ந்தே. (20)

கொல்ல மாண்டோ ராயிரத்தி னூறுபத்தேழ் கொண்டதொரு
மல்ல லான கரவருட மகர மாத நற்றேதி
சொல்லு மிருபத் தாறதனிற் சுக்ல பட்சந் தசமிதிதி
நல்ல பானு வாரமும்ரோ கணிநாள் மீன லக்கினத்தே. (21)

நந்த லில்லா ராசதமாம் வேளை யான நன்னுளிற்
சுந்த ரேசர் மீனாட்சி கணேசர் சுப்பிர மணியர்முதற்
சுந்த முறுதே வதைகடமக் கட்ட பந்த னங்கண்டு
விந்தை பெருகக் கும்பாபி டேகஞ் செய்த வியப்பென்னே. (22)

நந்தன ௵

திருநெல்வேலிக்

குறுக்குத்துறைச் சத்திரம்.

அன்புறு மாயிரத் தறுபத் தேழினின்
மன்பெறு நந்தன வருடம தான
சித்திரை மாதந் தேதியைந் ததனிற்
சுத்தம தான சுக்கிர வாரம்
பூர்வ பட்சம் புகலனு ஷத்திற்
சார்புறு திவ்ய தனுர்லக் கினத்தே
தென்னவ னாட்டிற் சிறந்து விளங்கு
நன்னய மான கண்டனு ரதனிற்
சீராஞ் சூரக் குடியிற் றேசிக
நாரா யணபுர நற்புகழ் வேண்டிப்

பாக்க முடையா ராகவே பகரும்
ஆக்கம துள்ளத் தன்புள வணிகர்
நாவன்னாப் பேனா வானாப் பானா
மேவிய லேனா வெனும்விலா சத்தார்
முன்னூல் கற்றோர் முழுதும் வியப்பப்
பன்னூ லாய்ந்த பண்புள முத்து
ராம னென்னு நற்றவத் தோனாற்
சேமம் பெருகச் செல்வர்கள் சூழுந்
திருநெல் வேலி க்ஷேத்திர மதனிற்
பொருநை யென்னும் புண்ணிய நதியிற்
றிருவுரு மாமலைச் சேவற் கொடியோன்
மருவுங் குறுக்குத் துறையில் மகிழ
இந்திர விமான முகப்பினி லியங்க
நந்த லிலாத நாடக சாலையுங்
காலனை வென்ற கடவுள்கண் டம்போல்
நீல நிறக்கால் நிகழ்ந்திடு திண்ணையும்
பதினறு காலிற் பாங்குடன் பணித்துக்
கதிர்விட் டொளிருங் கல்யாண மாலும்
பல்லுயி ரெல்லாம் பார்ப்பதற் கினிதாஞ்
செல்வ விநாயகன் சீருடன் விளங்கச்
சித்திர மதனாற் றேவர்க டம்மைப்
புத்தியோ டமைத்த போசன சாலையுந்
தாகந் தவிர்க்குந் தண்ணீ ரமைந்த
பாக சாலை பண்புட னமைத்துந்
தக்கோர்க் கெல்லாந் தகுந்தகு மென்ன
வுக்கிரா ணத்துக் காகவோர் கட்டுஞ்
சைவர்க டமக்குந் தவத்துறை யோர்க்கும்
வயிணவர் தமக்கும் வணிகர்க டமக்கு
மொவ்வோர் பால ரொழுங்கா யிருக்க
வெவ்வேறு கட்டிடம் வியப்புட னமைத்தே
யுத்தம மாகக் கட்டிய வுவகைச்
சத்திர மதனிற் றகும்பிரவேசஞ்

செய்து பின்னர் சிவப்பிரா மணர்க்கும்
வைதிகர் தமக்கும் வரும்புல வோர்க்கும்
அன்னமுஞ் சொன்னமும் அளவிலா தளித்து
நன்னய மருளுஞ் சண்முக நாதனை
மயில்வா கனத்தில் வந்தெழச் செய்தே
யுயர்வுற வாழ்த்தி யுவந்தனர் மாதோ. (23)

சர்வதாரிஞு

தேவகோட்டை.

அருமையா கியசாலி வாகன சகாப்தமது வாயிரத்தெ ணூறு பத்தி, லமைசர்வ தாரிவரு டத்தில்வை காசிமதி யாருமறு நான்கு தேதி, யமர்கிருஷ்ண பக்ஷமுஞ் சோமவா ரந்தசமி யாகும்ரே வதி ரிஷபமு, மானநிட் பஞ்சகஞ் சாத்துவிக வேளையு மாகின்ற சுபதினத் திற்,—பெருமைபெறு பாண்டியிற் றிலகமே யாகப் பிறங்கியுஞ் செல்வநீங்காப், பெரிதான தனதனுங் கல்வியிற் சேடனும் பின்னி ட்டு நிற்பதாகப், பெறுமுயிர்கள் வாழ்கின்ற தேவிநக ராந்தேவ கோட்டையில் வீற்றிருக்கும்,பிரபுவாஞ் சொக்கலிங் கேசர்மீ னாட்சி யொடு பின்னுமுள தேவர்கட்கு,—மரிமையாஞ் சிவபத்தி சீலம்வை ராக்கிய முற்றசீர் வணிகரெல்லா, மொப்புவமை யில்லாத் திருப்பணி யியற்றியே யுவகையுட னதனிலெழுக, வுள்ளபடி செய்தஷ்ட பந் தனங் கும்பாபி டேகமும் மொருமையாக, வுரித்தாய் நடத்தியே யன்னமுஞ் சொன்னமும் மொவ்வொரு வகைக்கும்வேறு,—யிரு மைபெறு கற்பகங் காமதே னுக்கிணை யீந்துநல் விருந்து செய்ய, இன்பத்து டன்ரிஷப வாகனந் தன்னிலே யிறைவனும் மிறைவியு டனே,யேறிவந் தருள்செயச் சண்டேசர் பின்னரும் இபமுகன் குக ன்முன்னரு,மெழுந்தருள் சிறப்பினைச் சேடனு லுஞ்சொல்ல வென் றுமிய லாதுமாதோ. (34

நந்தனஷூ

திருப்பரங்குன்றம்.

ஏர்மேவு கொல்லமாண் டாயிரத் தறுபதோ டெட்டுநந் தனவருடமு, மின்பமதி மகரமுந் தேதிபத் தொன்பதும் மெழில் பெருகு மதிவாரமுஞ்,—சீர்மேவ புநர்பூச மீனலக் கினமுஞ் சிறந்திடுஞ் சுபதினத்திற், றிகழுங் கபிட்டியா ரெனும்ராம நாதன்செய் சீராணைத் தாரணமுடன்,—பார்மேவு மானேச ராமசா மிப்பெயர்கொள் பண்பான வணிக செல்வன், பார்ப்பதற் கினிதாம் பரங்குன்ற நாதனெம் பரமனு வுடையம்பிகை,—தேர்மேவு சுப்ரமணி யக்கடவுள் முதலான தேவர்கட் கின்பமாகத், தெளிவுடன் கும்பாபி டேகஞ்செய் மகிமையைச் செப்பவல் லவர்கள்யாரே. (25)

விளம்பிஷூ

பிள்ளையார்பட்டி.

திருவான கலியுகம தையா யிரத்தாண்டு சேர்ந்தநல் விளம்பி வருடந், திகழ்மகர மாதநற் றேதிபத் ததனிலே தெளிஞாயி றேகாதசி, திதியான ரோகணி சேர்கும்ப லக்கினஞ் சிறந்தமெய்ச் சுபதினத்திற், றென்னவன் றேசமரு தங்கூ ரிராசநா ராயண புரத்தினுடனே,—அருவாங் கணேசமா நகரமென் றிடுபிள்ளை யார்பட்டி யாந்தலத்தி, லருச்சுன வனேசரோ டசோககுசு மாம்பிகை யருடகற்பகப்பிள்ளையா,ராதியாம் பரிவார தேவர்க டமக்குரித் தானதிரு வேட்டவணிக,ரண்டர்பர வும்படி திருப்பணி யமைத்துநல் லஷ்டபந் தனமு மன்பாய்ப்,—பெருமைசேர் கும்பாபி டேகமுறை செய்துயர் பிஞ்ஞுகன் றனையுமன்னை, பெட்புலவு கணபதி கந்தநற் சண்டேச பெம்மானொ டைவர்களையும், பேணுதற் கரிதான ரதரிஷப வாகனப் பரியுடன் கேடகமயில்,பிரியமா யாரோ கணித்தவரு மாபவனி பேணுநால் வேதவோசை,—தருவ,தாஞ் சங்கீத வோசைதே வாரங்கள் சாற்றுமெய் யடியரோசை, தற்பரன் றிருநாம வோசைபச னைக்காரர் தம்புருவி னோசைதிவ்ய, தங்கவாத் தியவோசை நடனநிகழ் தருமோசை தாவுசெல் வாணவோசை, தங்கமாய்ப் பொன்மாரி பொழிகின்ற வோசையுஞ் சாற்றுதற் கெளிதாகுமோ. (26)

விளம்பிவரு

சூரைக்குடி.

சீர்கொண்ட பாண்டிநன் ஞட்டிலுயர் புகழுடைத் தென்னவன் பூசைசெய்த, திவ்யமங் களசூரை நகர்தனி லுவந்தெழுந் தேசிக நாத மூர்த்தி, திகழ்வுறு மனோன்மணி யாவுடை நாயகி சேய்கந்த னைங்க ரன்முதற், றேவர்க டமக்குமெய்த் தொண்டுசெய் வழியடித் திறமை பூண் வணிகரெல்லாம்,--பார்கொண்ட சேடனுஞ் சிரசா யிரத்தினுற் பண்பென்று கம்பமிடவும், பாவல ரெலாம்புகழ் திருப்பணி யியற்றி யிப் பார்மீது கலியுகாதி, பகர்கின்ற வருடமோ ரையா யிரத்தினிற் பாவுநல் விளம்பிவருடம், பரிவான மிதுனமா தந்தேதி பதினென்கிற் படர்ஞாயி றுத்திரத்தி, லேர்கொண்ட சிம்மலக் கினமுதய நா ழிகை யெட்டுட னரையினுக்கு, ளிசையமேற் பதினென்று காவி னுக் குள்ளா யிலங்குமிச் சுபதினத்தி, விதமான வஷ்டபந் தனமோடு கும்பாபி டேகமங் கினிதியற்றி, யெனதத்த னம்மைகுகன் சண்டே சன் வேழமுக னென்னுமிந் நால்வராய,--தார்கொண்ட மூர்த்தியொ டெழுந்தருளலங்கார சகலவை பவமும்யாவுஞ், சற்சனர்க ளானதோர் பெரியோர்க ளடியார்கள் தகைமைசார் தனிகர்மற்ற, சுகவ ரும் வந்துமெய்ப் பத்தியொடு தரிசனஞ் செய்துநற் றனதனைத்த, சம்பத்தி னெடும்வாழ்க வாழ்கவச் சூரைநகர் சந்ததமும் மாரி பெய்தே. (27)

வேறு.

பொன்மலிதண் சூரைநகரீசற் கன்பாய்ப் புகழ்கும்பா பிடேகஞ் செய் விப்பதற்கே, நன்மதிநல் லறந்திகழு மற்றக் கோவி னகரத்தா ரனைவருமவ் தன்பாக் கூடித், தன்மணமார் தின்பமுட னதனைச் சார்ந்தசகலவிசா ரணைசெய்த வதிசயத்தைத், தென்மணிசேர் சேட னு யிரநா வாலுஞ் செப்புதற்குக் கூடுமோ செகத்தின் மீதே. (28)

மண்ட லாவபி டேக மகிமையைக்
கண்டு போற்றிக் களித்து வணங்குவார்
பண்டு செய்த பழவினை யாவையும்
விண்டு மேலவ ராக விளங்குவார். (29)

விகாரிஹூ

திருத்தண்டலை.

ஏருறும் விகாரிசம் வற்சரந் தைமதியி லிருபத்துமூன்றுதேதி, யெழில்பாநு பஞ்சமி திதியும்ரே வதியினி லிசைமீன லக்கினத்திற்,- பாருறும் பாண்டியிற் றேவையம் பதியினிற் பத்திசெய் வணிகருக் குட், பரிவான சத்திரத் தருண சலப்பெயர்கொள் பாக்யவா னன்பு கூர்ந்து,—சீருறுஞ் சோழவள நாட்டிலரி வாட்டாயர் செந்நெலின் னரிசியோடு, செங்கிரை மாவடுக் கொண்டுதிரு வமுதுசெய் விக்குந் திருத்தண்டலை,—நேருறும் க்ஷேத்திர நீணெறி நாதற்கு நிகழுஞா னம்பிகைக்கு, நேர்மையா யஷ்டபந் தனகும்ப வபிடேக நிலைபெற நிகழ்த்தினனே. (30)

———

விகாரிஹூ

திருப்பூவணம்.

அன்புறும் விகாரிசம் வற்சரந் தைமதிய மானவிரு பத்து மூன்றி, லாதித்த வாரமொடு ரேவதியு மாமீன மாகின்ற சுபதின த்திற்,— றென்பாண்டி நாட்டிலுயர் தேவையம் பதியினிற் றீரனு மண்ணுமலைச், செல்வனு ருடன்வணிக ருத்தம சிரேஷ்டர்கள் திரு ப்பூ வணந்தன்னிலே,—பொன்னியிர்ந் தழகிய மின்னன்னை யாரு டன் பூவண நாதருக்கும், புதிதான பணியமைத் தன்புடன் கும்பா பி டேகமும் புனிதமாக,—நன்குறச் செய்தன்று பஞ்சமூர்த் தங்க ளும் நயப்புடன் பவனிவருக, நடத்துவை பவமதைச் சேடனு லுங் கூட நவிலுதற் கெளியதாமோ. (31)

———

விகாரிஹூ

காளையார்கோவில்.

திருவான கலியுகம தையா யிரத்தொன்று சேர்ந்திடும் விகாரி வருடங், தேர்மகர மதிதேதி யிருபத்து மூன்றினிற் றிகழ்ஞாயி றமர பக்கந், தெளிவான பஞ்சமி திதியும்ரே வதியினிற் செயமீன லக்கி

னத்தே, தென்னவன் றேசத்தி னன்னகர மானதொரு தேவநக ரதனில்வாழுந்,—தருவான ராமசா மிப்பிரபு மகவான தாஷ்டீக னருணசலத், தனதனெடு தம்பிமார் மூவருங் காளையார் கோவி லெனு மாதலத்திற், றற்பரம ரானநம் காளீச மூர்த்தியொடு தன்மையுள சொன்னவல்லித், தாயினுக் கும்மயன் விஸ்வகன் மன்செயாத் தகமையுள பணிகள்செய்தே,—யருமையுள வஷ்டபந் தனமோடு கும்பாபி டேகமுஞ் செய்து மன்பி, லளவிடக் கூடாத மறையோர்க ளடியார்க ளரசர்கள் வணிகர் சூத்ரர், அறிவான வுத்யோக முறையிற் சிறந்தவர்க் கணியணி சாகைகண்டு, மன்னமுஞ் சொன்னமு நன்னயம தாகவே யள்ளியள் ளிக்கொடுத்தும்,—பெருமையுள பிரபுக்கள் விசாரணை செய்திடப் பிஞ்ஞகன் றனையுமிரவு, பெரிதான ரதரிஷப வாகனத் திற்பவனி வந்திடப் பெற்றபெருமை, பேசவோ சேடனும் பின்னிடுவ னிப்பணி பிரியமாச் செய்வர்தம்மைப், பெருக்கமாய் வாழ்வரென முன்னநான் சொன்னகவி பேணியே பார்க்கமாதோ. (32)

விகாரிஹுல

காஞ்சீபுரம்.

சீர்மேவு மாயிரத் தெழுபதோ டைந்தாண்டு திவ்விய விகாரி வருடந், திகழ்மகர மாதமிரு பத்துமூன் ருந்தேதி திவாகரர்க் குரியவராஞ், சேரமர பக்கமும் பஞ்சமியும் ரேவதி சிறந்தநட் சேத்திரமுநற், சிவகாம யோகமும் பத்ரவா கரணமுஞ் சேர்மீன லக்கினத்திற்,—பார்மேவு பாண்டிவள நாட்டினிற் றேவையம் பதியில்வாழ் வணிகர்தம்முட், பண்புமிகு லெச்சுமண தர்மகர்த் தாமுதற் பாக்யவான் சிலர்கள்சேர்ந்து, பங்கயன் மாறேவர் முனிவரெல்லாந்தவம் பண்ணியுயர் பரிசுபெற்ற, பாங்கான தொண்டைவள நாட்டிலுயர் காஞ்சியிற் பாவுகம் பாநதியினி, லேர்மேவும் வேதங்களுருவுகொண் டுளமா விருக்ஷத்தி னடியதனிலே, யின்புரு வுடன்றவஞ் செய்கின்ற காமாக்ஷி யிதயமகிழ் வுறவெழுந்த, ஏகாம் பரர்க்குமா வடிகந்த ராலய மெழிலிசேர் மண்டபமது, மியல்பாய் முடித்தட்ட பந்தனங் கும்பாபி டேகமுஞ் செய்திரவினில்,—வார்மேவு

மாதுமை யுடன்கச்சி நாதரை மகமேரு போலும்ரிஷப, வாகனத் திற்பவனி வரவும்வே தங்கள்கடல் வாய்விட்ட தெனமுழங்க, வாத் தியங் கணகணென வாணங்கள் சிலுசிலென வழிவழி யடியர்பாட, மண்டலம் விண்டலங் கண்டக மகிழ்ந்துநனி வாழ்த்திடச் செய்த னர்களே. (33)

சார்வரிஸூ

திருவாடானை.

வயமான வாயிரத் தெழுபதோ டைந்தாண்டில் வளமிகுந் தோங்குநற்சார், வரிவருடம் வைகாசி மாதமெட் டாந்தேதி வருமமர பட்சபாநு,வாரமுஞ் சஷ்டிதிரு வோணநா ளுஞ்சிம்ம லக்கினமதானதிவ்ய, மங்கள முகூர்த்தமதி லுயர்பாண்டி நாட்டினில் வளமான தேவைநகரிற்,— செயமிகுஞ் சத்திரத் தருணு சலச்செட்டியார்செப்பும் வாக்கியத்தைச், சிரசினில் வகித்தவர்க் கருமைமகவாஞ்சோம சுந்தரச் செல்வனூர்தாந், திகழுதிரு வாடானை யானதோர் க்ஷேத்திரத் தினிமேலழு சிநேகவல்லித், தேவியா ரொடுமாதிரத்தினே சுரரான தேவருக் கருமையாக,—நயமாந் திருப்பணி புதிதா யமைத்துமிக நாமெலாம் புகழ்வதாக, நன்மையா யஷ்டபந் தனமோடு கும்பாபி டேகமு நடத்தியன்று, நாட்டிலுய ருடையான் செய் ரிஷபவா கனமதி னமதத்த னம்மையுடனே, நற்பவனி வருகவும் வேதவோ சையுமெழ ராசனுஞ் சேதுபதியாற்,—சுயமான தேவார வோசையு முழங்கிடத் தூயசங் கிதமுழக்கத், துன்னும் வைபவமுடன் வந்தவர் தமக்கெலாந் துண்டான சாகைகண்டு, சொல்கின்ற போசன பதார்த்தங்கள் கப்பலிற் ரெருகுதியாக் கொடுகுவித்துச், சுதந்திரம தாய்க்கொள்க லாமென வுரைத்ததைச் சேடனுஞ் சொல்லவெளிதோ. (34)

பிலவஸூ

திருநாட்டியத்தான்குடி.

சீர்மேவு பிலவவரு டந்தைமா தந்தேதி யெட்டினிற் பாண்டி நாட்டிற்,நிகழ்கின்ற தேவநகர் வாழ்கின்ற தேனப்ப சீமான் றவத்

துதித்த,—தார்மேவு தனவணிக ருகுமண் ணுமலெ சகோதரன் முத்தையாநற், றம்பிலக் குமணனுயர் சோழநாட் டிற்றிரு நாட்டியத் தான்குடியினி,—லேர்மேவு ரத்னபுரி யீசனெடு மங்களநாயகிக் கேற்றதான, இன்பமுள கர்ப்பக்கி ரகமுதல் மண்டப மேற்றதிரு மதில்கோபுரங்,—கார்மே விடக்கட்டி யன்புடன் கும்பாபி டேகமுங் கண்டவதனைக், காண்பதற் காயிரங் கண்ணமைத் தானிலெ கமலநான் முகனுமாதோ. (35)

சுபகிருதுவரு

அரியக்குடி.

சுயமான சுபகிருது வருடமே டத்திங்க ளொன்பதிற் சோம வாரஞ், சொல்லமர பட்சஞ் சதுர்த்தசியொ டத்தநாட் சுபசிம்ம லக்கினத்திற்,—செயமான பாண்டிநன் னாட்டிலரி யக்குடி க்ஷேத்திரந் தனிலெழுந்த, சீநிவா சப்பெரு மாளுடன் முப்பிற தேவரனை வோர்களுக்கும்,—வயமான வணிகரெல் லோர்களுந் நீராவிமண்டபத் துடனருத்த, மண்டபமு முயர்மகா மண்டபந் திருமாளி கைப்பத்தி மண்டபங்கள்,—நயமாய் முடித்தட்ட பந்தனங் கும்பாபி டேகமு நடாத்தவன்று, நல்லிரவு பெருமா ளெழுந்தருள் பவனியை நான்கூற வெளியதாமோ. (36)

சோபகிருதுவரு

திருப்புனவாசல்.

இன்றமை கலியுகம தையா யிரத்தைந்து சோபகிரு தானவருட, மியைகின்ற வைகாசி தேதியொரு பத்தொடெட் டெனுமாதி வாரமதனி, லின்பமுள சுக்லபட் சங்கொண்ட பஞ்சமி திதியுடன் பூசநாளு,மியல்பான ரிஷபலக் கினமான சுபதினத் தெழிலான பாண்டிநாட்டில்,—நன்றான தேவநகர் வாழ்சிதம் பரவணிக நற்புருடனெ த்தனத்தை, நன்மகவெனுஞ்சுப்ர மணியனுந் தீரனும் நகரவட்டகை வணிகரும், நமன்வாதை யணுகாத தீர்த்ததல மூர்த்தியோ டுயர்வும் பொருந்திமேலு, நமதுகுல குருவுக் கதிட்டான தேயமாய்

நாடிடுந் தலமதாகி,—மன்றும் விருத்தபுரி யாந்திருப் புனவாயின் மங்களம தானபெரிய, வடிவா யெழுந்தருள் பழம்பதி நாதர்க்கு மகிழ் பெரிய நாயகிக்கு, மன்னுகண பதிசுப்ர மணியர்முத லானபரி வாரதே வதைகளுக்கு, மாட்சிமைய தாந்திருப் பணிவிமா னத்துடன் மண்டபம் முதலானவை,—யென்றும் விளங்கவே சீரணோத் தாரணமின்புறச் செய்துபின்ன, ரெழிலான வட்டபந் தனமோடு கும்பாபிடேகமு மியற்றியேயன், றிரவினிற் பஞ்சமூர்த் திகளும்வீ தியிலே யெழுந்தருளி வருகவுயிர்க, ளின்புறப் பார்த்ததி சயித்துமே யானந்த மெய்தினர்க ளறிகமாதோ. (37)

குரோதிஹு

திருத்தங்கூர்.

செயமிகு குரோதிசம் வற்சரஞ் சித்திரை மாதமது தேதிபத்திற், றிகழ்சுக்ர வாரமுறு பூர்வபட் சத்திலே திதியான சத்தமிதனி,—னயமதாம் புனர்பூச நட்சத் திரத்திடப லக்கின மாந்தினத்தி, ஞட்டிலுள வணிகர்சேர்ந் தூணுவொ டாணுவு நன்மையாம் பொருள்கொடுத்து,—வயல்வளஞ் சூழ்திருத் தங்கூரி லுறைநாக நாதனும் வள்ளலுக்கு, மாதா வெனுஞ்சொன்ன வல்லிமுத லனைவர்க்கு மாபணி யியற்றி யன்பாய்ச்,—சுயமான வட்டபந் தனமோடு கும்பாபிடேகமுஞ் சுகமதாகத், தூய்தா நடந்ததும் நற்கடவுள் பவனியுஞ் சொல்லுதற் கெளியவாமோ. (38)

குரோதிஹு

காளையார்கோவில்.

சீர்பெறு குரோதிசம் வற்சரம் வைகாசி தேதிபதி னலதனிலே, தேவநகர் வாழ்ராம சாமிநற் செட்டியார் செய்தவத் தாலுதித்த,—பாருறுஞ் சீரகத் தாரரு ணாசல பாக்யவான் றம்பிகளுடன், பரமான காளையார் கோவிலில் யானைமடு பார்ப்பதற் கழகு செய்யக்,—காரும் படிமைய மண்டப விமானங் கணக்குடன் றனமைத்துக்,காண்பதற் கின்பஞ்செய் தெப்பமது கண்டுநங் கடவுள்சோ மேசர்வர

வே,—யேருறும் படிதீப மேற்றியெங் கணுமுலக ரின்புறச் செய்
துதினமு, மிப்படி நடக்கக் கிராமஞ் சமர்ப்புவித் திருமைநல மெய்
தினரே. (39)

குரோதிஸூ

உப்பூர்.

திகழ்வாங் குரோதிசம் வற்சரங் தைத்திங்கள் தேதியிரு பத்
தொன்பதிற், றினம்வெள்ளி சுக்லபட் சஞ்சட்டி யசுபதி சேர்மீன
லக்கினத்தே,— துகளிலாத் தேவநகர் வணிகனரு ணுசலத் தோ
ன்றலுஞ் சோதரர்களுந், தூய்தான லவணபுர மானவுப் பூரினிற்
சுபராமர் பூசைகொண்ட,— நிகழ்வதாம் வெயிலுகந் தருள்விநா
யகமூர்த்தி நிர்மலத் தானத்திலே, நியமத் துடன்புதுப் பணியது
வியற்றியும் லிங்கமுதன் மூர்த்திவைத்து,— மகிழ்வதா யட்டபந்
தனமோடு கும்பாபி டேகமுஞ் செய்துதந்தி, மாமுகக் கடவுள்வலம்
வந்திடச் செய்பவனி மகிமையைக் கழறவெளிதோ. (40)

விசுவாவசுஸூ

திருவண்ணுமலே.

அன்னம் போட்ட தவப்பயனல் ஆனைக் காணு வலகயிலுளோர்
அன்னம் பன்றி யுருவாகி அயனு மாலும் அறியவொணு
அன்ன கடவுள் அமரருணு சலத்திற் பணியோ டபிடேகம்
அன்ன வணிக ரெலாஞ்சேர்த்துச் செய்தா னந்தித் தகமகிழ்ந்தார். ()

ஆக்கமுள கலியுகம தையாயி ரத்தேழ தானவிசு வாவசுவினில்,
அமர்கின்ற வைகாசிதேதிமுப் பதுதன்னி லணிமருவுசோமவாரம்,
ஆகின்ற சிவபிரா னுக்குரிய நன்னுளில் அஸ்தந க்ஷத்திரத்தோ,
டானதோர் சிம்மலக் கினமான சுபதினத் தாகல்ல வேளைதன்னில்,—
ஊக்கமுள பாண்டிநன் னுட்டி லுயர் வணிகர்களொருங்குசேர்ந் துவ
கைகொண்டே, யூர்த்துவம தாயயன் மாலதோ முகமதா யொருகோ
டி வருஷவளவும், உரத்துடன் றேடியுங் காணொணு தோங்கியொளி

ருற்றவண் ணமலைதனில், உலகோர்க ளுய்யும் படிக்கடி வாரத்தி லுருவான வடிவமாகிப்,— பாக்கவோ ரருணாச லேசுர ராகவே பண்புடன் விளங்கிநிற்கும், பதிபணி தன்னையும் பழையதிரு மதிலையும் பகருமுத் தாரணமுடன், பத்தியுள மண்டபம் பரையுண மூலையம்மை பணியதும் புதிதாகவே, பரிவுட னளவிலாத் திரவியத் தொகைகொண்டு பாங்காக வேநடத்தித்,—தீர்க்கமூறும் அஷ்டபந் தனமுடன் கும்பாபி ஷேகமுஞ் செய்தும் அந்தத், தினமதிற் கயிலைமலை போல்வெள்ளி ரிஷபந் திகழ்ந்திடக் கடவுள்தானுஞ், சிறப்புடன் ஆரோக ணித்துவர அம்மையொடு சேய்களுங் கூடவரவே, செய்ததோர் சிங்கார மதனையச் சேடனுற் செப்பவும் எளிதாகுமோ.

பராபவஹூ

பள்ளத் தூர்.

சீருறு பராபவ வருடமதில் வைகாசி தேதிபதி னைந்ததனிலே, திகழ்சோம வாரமொடு சுக்லபட் சஞ்சட்டி திதியான பூசநாளி,— லோர்வுறும் ரிஷபலக் கினமான சுபதினத் துயர்தகைமை யானபள்ளத், தூரினில் வணிகர்செய் நாயனர் குருபூசை யுறுதற்கு மடமதொன்று,—பேர்பெறுங் குமரப்ப சீலநற் செட்டியார் பெலமாக வேநடத்திப், பெருமைக் கணேசரொடு நடராச மூர்த்தியும் பேர்பெற்ற சேக்கிழாரும்,—பாரெலாம் புகழுறு பத்துமூ வருமமை படமதுந் தானமைத்துப், பத்தியாக் கிரகப்ர வேசவபி டேகஞ்செய் பன்மையைப் பகரவெளிதோ. (43)

பராபவஹூ

நாச்சி நகர்.

ஏருறு பராபவ வருடத்தி லானிமதி யிருபதோ டாறுதேதிக், கியல்பான குருவார மானசுப தினமதி லேற்றமுள பாண்டிநாட், டிற்,—பேருறும் படியுயர்ந் திடுநாச்சி நகரிற் பிறங்குதன வணிக

ருக்குட், பிறைசூடி யடிபரவு சுபராம நாதநற் பெயரினுன் மனமுவந்து,—சீருறு முமாமகேச் சுரருமுமை யம்பிகைத் தேவியுடன் வீற்றிருப்பத், திருப்பணி யதும்புதிய தாக்கியே கும்பாபி டேகமுஞ் செய்துமிக்க,—பாருறும் படிரிஷப வாகனத் தவ்விருவர் பவனிவந் தருள்காட்சியைப், பண்புட னடத்துசிங் காரத்தை யெம்மனோர் பகருதற் கெளியதாமோ. (44)

பிலவங்கஹு

சுவாமிமலை.

சீர்மேவு மாயிரத் துத்தொளா யிரத்தேழ் சிறந்தபில வங்கவருடஞ், சித்திரை மாதத்தில் வருதேதி பதினாறு திகழ்வதா மாதிவாரஞ், செறிகின்ற பௌர்ணமி திதியினிற் சோதிநாட் டிகழ்மிதுன லக்கினத்திற், றென்பாண்டி நாட்டினிற் கானாடு காத்தான் சிறந்தநகர் வணிகருக்குட்,—பேர்மேவு வெள்ளையப் பேந்திர பூபதி பெற்றிடுந லருணசலம், பீடுறுசு வாமிமலை யானபடை வீட்டினிற் பிரணவ மந்திரத்தைப், பெம்மான் றனக்குமருள் செய்கின்ற வல்லவப் பெருமையுள சாமிநாதன், பிள்ளையா ராமுழு முதற்கடவுளென வறிஞர் பேசிடுங் கணபதிக்கும்,—பார்மேவு மீனாட்சி சுந்தரேஸ் பரரோடு பரிவார தேவதைக்கும், பகர்வதற் கரிதான வாலயத் தொடுமதில் பத்தியுள மண்டபங்கள், பாங்கா முடித்தட்ட பந்தனங் கும்பாபி டேகமுஞ் செய்து பண்பாய்ப், பணியான சுவணகல சஞ்செய்து சாத்தியே பார்ப்பதற் கினிமையாக,—வர்மேவு வெள்ளிரத மோடுமயில் வாகன மினமாக வேமுடித்தங், கெழிலான வுற்சவமூர்த்தியொடு சண்முகக் கடவுளு மெழுந்தருளவே, யிரவுபக லோயாமலன்னமொடு சொன்னமு மிபற்கையுட னீந்துமன்பா, யியல்பாய் முடித்ததோர் மகிமையைச் சேடனு மியம்புதற் கெளியதாமோ. ( )

பிலவங்கஹு

நேமம்.

சீலமிகு மாயிரத் துத்தொளா யிரத்தேழ் சிறந்தபில வங்கவருடஞ், சேர்கின்ற வைகாசி தேதியத் தாம்பூர்வ பட்சமுள வேகாதசி

திதியினிற் குருவார மத்தநட் சத்திரஞ் சேர்மிதுன லக்கினத்திற்,
றென்பாண்டி நாட்டிலுயர் தேனூறு செல்கின்ற தெளிவான
நேமநகரில்,—நீலமிகு பார்வைகொள் ளாவுடை நாயகி நிகழ்சௌந்
தரநாயகி, நீங்காச் செயங்கொண்ட சோழீச ருக்கன்பு நீடித்த வணி
கரெல்லா, நிலைமையுள கர்ப்பக்கி ரகமுதன் மண்டப நேரான கோபுர
மதில், நித்யமங் களமாய் விளங்கவே புதிதாய் நிகழ்ந்திட வேமுடி
த்துக்,—கோலமிகு மஷ்டபந் தனமொடு கும்பாபி டேகமுங் கொண்
டருளவே, கோதிலா மறையோர்கள் மந்திர தந்திரங் குறைவிலா
தேநடத்தக், கோமளம தாகவே நால்வகைச் சாதியார் கொண்டிடச்
சுவையாறுடன், குவிகுவிய லாய்ச்சமையல் செய்தங்கு வந்திடக்
குணமுட னுபசரித்துச்,—சாலமிகும் வீதியிற் பஞ்சமூர்த் திகள்சார்
தனித்தனி வாகனமதிற், றகமையாய் வருகவுஞ் சங்கீத வோசை
யொடு தருவாண வோசையாதி, சாகரத் தோசையை யடக்கியே
வீறிடச் சகமெலாம் புகழோங்கிடச், சந்தோஷ மாகவு நடத்தின
தோர்பெருமை சாற்றுதற் கெளிதாகுமோ. (46)

பிலவங்கவருடம்

திருவானைக்கா.

அருண்மேவு சாலிவா கனசகாப் தந்தன்னி லாயிரத் தெண்ணூ
ற்றுமுப், பதுபில வங்கவரு டத்திலே தைத்திங்க ளானவிரு பத்து
நான்கி, லழகுபெறு குருவார முஞ்சுக்ல பட்சமு மமைந்தபஞ் சமி
திதியுட,னடுத்ததோ ருத்திரட் டாதிநட் சத்திரமு மமைமீன லக்கி
னத்திற்,—கருணைசேர் தென்பாண்டிநாட்டினிற் கானாடு காத்தானில்
வணிகருக்குட், கனிவுமிகு ராமநா தையாவின் மகனான கல்விச் சித
ம்பரையா, கனமான தனவணிகர் பொருளுதவி கொண்டுபூங் கழனி
சூழ் சோழநாட்டிற், காவிரிக் கரையிலுறு திருவானைக் காவெனக்
காசினி தொழுந்தலத்தி,—லுருவினிற் சிறிதாஞ் சிலந்தியொடு யா
னையு முவந்துபூ சித்ததான, வொப்புயர் விலாதசீ ரப்புவடி வாகியே
யொளிர்கின்ற சம்புகேச, ருடனெழுந் தருள்கின்ற வகிலாண்ட நா
யகிக் குரிமையுறு மாலயஞ்செய், துயர்வான மண்டபக் கோபுரந்

திருமதில்க ளுவமையில் லாதுசெய்தே,—திருமேவு மட்டபந்தனமுடன் கும்பாபி டேகமுஞ் செய்யவீசர், தேசியுடன மகிழ்வெய்திரிஷபவா கனமீது திருவுலாப் பவனிமேவச், செகமெலாம் புகழருட்சங்கரா சாரியர் சீடருட னெய்தியேதுதச், சீடர்க டமக்குப சாரஞ்செய் தவைதயாதி சேடனுஞ் செப்பொணுதே. (47)

பிலவங்கவருஷ

திருப்பாதிரிப்புலியூர்.

இன்பமுறு மாயிரத் தெண்பத்து மூன்ருண் டிலங்குபில வங்கவருட, மெழிலான மகரமா தந்தேதி யிருபத்து நான்கினில் வியாளமேவு, மிசைபூர்வ பட்சபஞ் சமியுத்தி ரட்டாதி யோர்மீன லக்கினத்தி, லேற்றமுள தென்பாண்டி நாட்டினில் வளம்பெறு மிராமச்சந் திரபுரத்தின்,—மன்பரவு வணிகரிற் றகரவரி நான்கினெடு மருவுமுதலுயர்விலாச, வகைமூன்று தனிஞச்சி யப்பனெடு முருகப்ப மணிசிதம் பரவணிகனு, மகத்துவஞ் சேர்திருப் பாதிரிப் புலியூரின் மதிபுனை பாடலேச, வரனேடு மினிமையுறு பிரசன்ன நாயகி மகிழ்ந்தினி திருப்பவேண்டி,—யன்புடன் கர்ப்பக்கி ரகமுதன் மண்டபமளப்பரிய திருமதினமுத, லாலயமெ லாஞ்செய்து கும்பாபிடேகமுமன்புறச் செய்துமேலா, மழகான ரிஷபவா கனமீது சிவனுட னம்பிகை யெழுந்தருளவே, யன்னமுஞ் சொன்னமு மவரவர்க் கேற்றபடி யாராய்ந்து தந்துமகிழ்வாய்த்,—தென்பெற நடாத்திமிக வானந்தமுற்றுமிகு தெளிவுடன் வாழுகின்ருர், செகமெலாம் புகழ்மண்டலாபிடே கத்தைச் சிரத்தையுட னேநடாத்திச், சிவபிரான் பணிவிடை யனைத்தையு முடித்துளந் தெளிவுடன் றிருவருளுறச், சீர்முத்து ராமநற் கவிஞனுற் றீட்டிய சீட்டுக் கவித்தொடையிதே. ()

கீலகவருஷ

கோவிலூர்.

பூமி தன்னி லுயர்வான பாண்டி நாட்டிற் புனிதமுள

ணமம் பெற்ற கோவிலூர் நண்ணும் கொற்ற வாளீசர்க்

கேம மான திருநெல்லை யம்மை யார்க்கு மினிதாகச்
சேம மான திருப்பணிமுன் செய்தான் வீர பாண்டியனும். (49)

பாண்டி யன்றான் செய்தபணி பழமை யாகிப் போனதினு
லாண்ட வன்றான் செய்வமென வகத்தி லுன்னி மறந்ததனைக்
காண்டற் கரிய திருநெல்லைக் கன்னி வடிவ மாய்ச்சென்றே
யாண்ட வற்குத் தாயினிடம் பணியை முடிக்க வருளென்ன. (50)

தாய்தான் மகன்வந் ததற்பின்பு சொல்லி மறைந்த சங்கதியை
நேய மாக வெடுத்துரைக்க நெல்லைத் தாயின் கிருபையென
வாய்பே சாது கேட்டுவந்து மகிழ்ந்து பரமா னந்தமுடன்
காய மாக வப்பணியை முடித்துப் பின்னுங் கருணையுடன். (51)

மண்ட பங்கள் விமானங்கள் மதில்கண் முடித்து மகிழ்வெய்தத்
தொண்டர் பரவுஞ் சிதம்பரசற் குருவுஞ் சோமாஸ் கந்தருக்குக்
கொண்டல் நிறமாய்ப் பணிமுடித்துக் குளமு மைய மண்டபமுங்
கண்ட பேர்கள் வியந்துவக்கக் கட்டி முடித்துக் காட்டியபின். (52)

தூய தான வீரப்ப சுவாமி தானுந் துகளில்லா
நேய மான தனவணிகர் நிரம்பக் கொடுத்த திரவியத்தா
லாயத் துளதம் மடியார்கட் கோயா தன்ன மளித்தருள
வாய்த லான கிராமத்தை வாங்கிக் கொற்ற வாளீசர். (53)

பணிகள் யாவுஞ் சீர்திருத்தம் பண்ணி விழாச்செய் மண்டபமும்
அணியொட் டிக்கால் மண்டபமு மழகாந் தெற்கு வாசலுடன்
கணித மான கோபுரமண் டபமுங் கண்டு சித்திரங்கள்
திணியாய்ச் செய்துந் திருநெல்லைத் தாயா ருக்குஞ் சிறப்பாக. (54)

ஆகமங்கள் சொன்னபடி கருப்பக் கிரகம் புதிதமைக்கப்
பாக மான கற்கலைத்தான் பளிங்கு போலத் தாணிழைந்து
நாக பர்வ தம்போல நடத்தி முடித்த நயப்பதனை
வேக மான சேடனுமே விளம்ப வெளிதோ மிகவரிதே. (55)

அரிதற் கரிய வீதிகளி லமைய மாட மாளிகையுந்
தெரிதற் குளவித் யாசாலை தெவிவாம் பாட சாலைகளும்
பரிவாய் மறையோர் சாலைகளும் பசும டஞ்செய் சாலைகளு
முரிய தான மடமதுவு முவமிக் கொண்ணு தேயிபற்றி. (56)

தேனு ளூன மதுநதிக்குந் தெளிவாய்ப் பால மதுங்கட்டி
வான மளாவ ஆரிசுந்தான் வளைத்துப் பக்கத் தவுதாவு
மான மட்டு மழகாக வமைத்துப் பிள்ளை யார்கோவில்
போன கத்துக் குரித்தான குளமுங் கட்டிப் புதிதாக. (57)

கட்ட வேண்டு வதுவொன்று மில்லை யென்னத் தான்கட்டித்
திட்ட மான வாகனங்கள் முழுதுஞ் செய்து சிறந்தொலிக்க
வட்ட மான பதக்கங்கள் மணிக ளாப ரணங்களெலாஞ்
சிட்டர் பரவச் செய்துமுடித் தின்ப மாகத் தேசிகனூர். (58)

இங்கி லீசாண் டாயிரத்துத் தொள்ளா யிரத்தோ ரெட்டதனின்
மங்க லஞ்செய் கீலகமாம் வருட மேச மாசமதிற்
சங்க மான தேதிபதி னென்று வியாழஞ் சப்தமியாந்
துங்க மான வுத்திரநாள் துலங்கு மிதுன சுபதினத்தில். (59)

இனமாங் கொற்ற வாளீசர்க் கின்ப மான திருநெல்லை
வனமா மியானை முகத்தருக்கு மகிழ்வாஞ் சுப்ர மணியருக்குங்
கனமா நித்ய கல்யாணி கணவர் கயிலா சப்பதிக்கும்
அனக மான பரிவார தேவ தைக ளனைவோர்க்கும். (60)

அஷ்ட பந்த னங்கள்செய்து மழகா யமைத்த சாலையிலே
திட்ட மான கும்பங்கள் திகழ வைத்துச் சிறப்புள்ள
சிட்ட ரான ஆசிரியர் தெளிவாங் குருக்கள் மார்களுமே
மட்டி லாத வுபசாரஞ் செய்து வந்த வனப்பென்னே. (61)

வந்திடு மறையோர் கூட்டம் வாழ்சிவ மறையோர் கூட்டஞ்
சுந்தர கும்பம் வைத்துத் தொன்மனுச் செபிப்போர் கூட்டந்
தந்திடு நாம வோசை சதுர்மறை முழக்க மென்னச்
சிந்தையா ராக மத்தின் செயல்விதி வழாது செய்தே. (62)

தங்கக் கடங்க ளொருபுறமுந் தாம்ப்ர கடங்க ளொருபுறமுந்
திங்கள் போன்ற வெள்ளியினாற் செய்த கடங்க ளொருபுறமு
நங்கை மார்க ணடித்திடவு நற்சா மரங்கள் வீசிடவும்
அங்க மான கும்பமெடுத் தபிடே கங்கள் செய்தனரால். (63)

செய்த வங்கா ளிரவினிலே சிறக்க விடைமீ தெழுந்தருளி
வையம் புகழுங் கொற்றவா ளீசர் காந்தி மதியம்மை
மைய மாக வீதிகளிற் பவனி வரநன் மடந்தையர்கள்
துய்ய நடனம் புரிந்திடவுந் தூயா லாத்தி யெடுத்திடவும். (64)

ஆல வட் டஞ் சுருட்டிகுடை யணிதோ ரணங்கள் பிடித்திடவு
நீல வெடிவா ணத்தோசை நிமல சங்கீ தத்தோசை
சால வேத முழக்கோசை சத்ய லோகம் வரைசெல்லக்
கோலத் தீபப் பிரகாசங் கொள்ளை யிருளைக் குடித்திலங்க, (65)

வாத்தி யத்தி னினங்கள்பல வரிசை வரிசை யாய்த்தொனிக்கத்
தோத்தி ரஞ்செய் விண்ணோர்கள் தொகுபொன் மலர்மா மழைபொ
காத்தி ரத்தால் மிகவணங்கிக் கழனிப் பதியி னடியரெலாம் [ழியக்
ஏத்த வைய னம்மையொடு மெழுந்த வுலாவை யென்சொல்வேன்.()

ஆகம சாலைக ளொருசா ரந்தணர் சாலைக ளொருசார்
யாக சாலைக ளொருசார் ஞானிகள் சாலைக ளொருசார்
பாக சாலைக ளொருசார் பண்டிதர் சாலைக ளொருசார்
தாக மதுத விர்த்தாளுந் தண்ணீர்ப் பந்தல்க ளொருசார். (67)

மகத்தான சாலைதனில் வான்கமுகு வாழைகளுஞ்
சுகந்தாதி மாலைகளுந் தோரணமுஞ் சூழ்ந்தமைத்தே
யுகந்தவாற் சேட்டுடனங் குளோப்பர்களு மொருங்கேற்றிப்
பகர்ந்திடுபல் காவணங்கள் பாங்குடனங் கலங்கரித்தே. (68)

இந்துடனே பானுவும்வந் திளைப்பாறி வெளிச்சமதை யீந்து நிற்கத்
தந்திரமாய்ச் செய்திட்ட சாலைகளி லவரவர்க்குத் தக்க தாக
நந்தலிலாப் போசனத்தின் பின்னழைத்து நயமொழிகணவின்று நல்ல
சந்தனா திகள் பூசித் தாம்பூலா திகள்கொடுத்துச் சார்ந்து நிற்க.(69

கல்வியினிற் சிறந்தோர்க்குங் காவியததா லுயர்ந்தோர்க்குங் கவி
சொல் வோர்க்குஞ்,சொல்வேத வாக்கியர்க்குந் தொண்டு செய்வோர்
தங்களுக்குஞ் சுகம தாக, நல்குரவென் பதுகனவுநாடாது பொரு
ளதனை நயந்து நல்கிச், செல்வமுள வணிகர்கட்கு விபூதிப்பை
யதுங்கொடுத்துச் சிறக்க வாழ்ந்தார். (70)

சௌமியஹூ

கொத்தமங்கலம்.

சீர்மேவு மாங்கிலாண் டாயிரத் துடனேதொ ளாயிரத் தொன்பததனிற், சேர்கின்ற சௌமிய வருடமுறு சிங்கமதி தேதிபதி ஞன்கதனிலே, திகழ்பானு வாரமுந் திதிதிர யோதசி திருவோண நட்சத்திரந், திவ்யதனு லக்கின மானசுப தினமதிற் றென்னவன் றேசத்திலே,—கார்மேவு கொத்தமங் கலமான நகரினிற் கருணையுள தனவணிகர்கள், கண்ணுதற் சூதவன நாதன் சௌந்தரி கனிவுட னமர்ந்திருக்கக், கனமான கர்ப்பக் கிரகநீ ராவியுங் கதிர்கொண் மண் டபவாவியுங், காண்பதற் கினிதான பரிவார வாலயங் கண்டு திரு மாளிகையினிற்,—பேர்மேவு மட்டபந் தனமோடு கும்பாபி டேகமுஞ் செய் துநிசியிற், பெறுதற் குரித்தான வெள்ளிவிடை மீதினிற் பிஞ்ஞகனெ டம்மைவரநற், பிள்ளையார் கந்தவேள் சண்டேச ராமிவர் பெருச்சாளி மயில்கேடகம், பெருமையோ டேறிவர வேதபாராயணம் பிரியமுள சங்கீதமும்,—பார்மேவு வாணமத் தாப்புட னதிர்வெடி பலபல வாத்தியங்கள், பரவையொலி போலவே யெங்கணுமுழங்கிடப் பரமனடி யார்கள்யாரும், பார்த்துக் களித்திடச் சட்ரசத் துடனன்ன பானதி யுண்டிருக்கப், பதமதாச் சாலைகள் கட்டியுநடாத்தின பண்பையான் பகரவெளிதோ. (74)

சாதாரணஹூ

மாவடிப்பட்டி.

சுகமான வாங்கில வாண்டா யிரத்துத் தொளாயிரத் தானபத்திற், றேன்றுசா தாரண வருடம்வை காசியேழ் தேதியிற் சுக்ரவாரந்,—திகழ்வதாந் திதிதுவா தசியத்த நாள்மிதுன லக்கினச் சுபதினத்திற், றென்பாண்டி நாட்டிலுயர் புதுவயல் வாழ்வெள்ளை யப்பனுர் தீரன்மகனுந்,—துகளிலாத் தெய்வத்தான் செட்டிதன் ஞன்முனந் தொண்டமான் புதுக்கோட்டைசேர்ந், துறுகின்ற மாவடிப்பட்டியிற் செய்கின்ற தூய்தான வூருணியையும்,—புகழ்பெருகும்

வளரொளிவி நாயகர் பணியையும் புத்ரரா தியர்களிப்பப், புதிதா யமைத்துப்ர திட்டையபி டேகஞ்செய் புதுமையைக் கூறலெளி தோ. (75)

சாதாரணஞூ

திருப்பராய்த்துறை.

ஆண்டதனி லுயர்வான சாதார ணவருட மானிபதின் மூன்று தேதி, யாதித்த வாரங்கொள் பூர்வபட் சத்திலே யமைசதுர்த் திதிதிருவோணங்,—காண்டகு மோர்சிம்ம லக்கின மாந்தினங் காருடு காத்தானிலே, கனமான தனவணிக வீரப்ப வேளுதவு கருணாநா கப்பசீல,—னீண்டசோ ணுடுற்ற காவேரி நிகழ்சீர்ப் பராய்த்துறை யாந்தலத்தி, னின்மலக் கேமவரு ணேமவரு ணேஸ்வரி யுடன்குருகாவனேசர்,—பூண்டதிரு வாங்கருப் பக்கிரக முதலான புதிதாயமைத்து மன்பாய்ப், பொலிவுடன் கும்பாபி டேகமு நடத்தின புதுமையைப் புகலலெளிதோ. (76)

சாதாரணஞூ

பலவான்குடி.

சீர்மேவு மாங்கிலாண் டாயிரத் துத்தொளா யிரத்தோடு சேர்ந்தபத்திற், றெளிவான சாதார ணவருடஞ் சிங்கமதி தேதிதிரி குருவாரமுங், திகழ்பூர்வ பட்சமுந் திதிதிர யோதசி சேருத்தி ராடதினமுங், தேர்வுபெறு மூதயாதி யைந்துமே லைந்துவரை சேர்கன்னி லக்கினத்திற்,—பார்மேவு பலவான்கு டியின்மேவு வணிகரிற் பணிராம குமரப்பவேள், பண்புள தவத்தா லுதித்தசுப் பிரமணிய பாக்யன்சகோதரர்களும், பரிவுட னிருக்கின்ற வூருக்கு மேல்புறம் பாட்டையி லூருணியதும், பத்தர்கள் வசித்துமே லோங்குதிரு வாசகப் பாடம் படிக்குமடமுங்,—தேர்மேவு நடராச மூர்த்தியொடு செல்வவி நாயகர் திருப்பணியதுஞ், செய்துமே பிரதிட்டை பிரவேச கும்பாபி டேகமுஞ் செவ்வையாகத், தெளிவுட னடத்திியே யன்

முராத் திரியிற் செகம்பரவு கணபதியொடுந், திடமான நடராச மூர்த்தியுந் தேவியுந், திருவுலாப் பவனிவரவே,—நார்மேவு கோவிலூர் ஞானதே சிகரோடு நண்பான வடியார்களும், நாட்டிலந் தனவணிகர் மற்றுமுள யாவரு நாட்டமாய் வந்திருக்க, நண்பாக வவரவர்க்கானகட் டிடமதும் நால்வகை யுண்டியாதி, நயப்புட னீந்தமெய் வரிசைகள் யாவையு நவிலுதற் கெளியவாமோ. (77)

சாதாரணஹு

சிவற்பட்டி.

சீர்கொண்ட கலியுகம தையா யிரத்தொடு சிறந்தபதி னோராண்டினிற், றிகழ்கின்ற சாதார ணவருட மைப்பசித் தேதியெட்டாந் திங்களிற், றேரமர பட்சங்கொள் சஷ்டிதிரு வாதிரை சேர்தனுசு லக்கினத்திற், றென்னவன் றேசத்தி லுன்னதம தாகச் சிறந்தொளிர் கின்றதான,—ஏர்கொண்ட சிவபுரிய தாஞ்சிவற் பட்டியி லிருக்கின்ற தனவணிகர்சு, மெளமதிறைவி மீனாக்ஷி சுந்தரர் சந்நிதிக் கேற்கவே மூன்றுநிலைவைத், திராசகோ புரமிரண் டுண்டாக்க முத்தையசெட்டிக் கியம்பவுடனே, யிகலோக பரலோக மெங்கும் புகழ்ந்திடவெழிலா யமைத்துரைக்கப்,—பேர்கொண்ட கும்பாபி டேகமுஞ் செய்தன்று பிஞ்ஞக னம்மையுடனே, பிள்ளையா ரொடுகந்த சாமிசண் டேசுரர் பிரியமாய்ப் பவனிவரவே,பேதைமை யகற்றுமோர் வேதபா ராயணம் பின்னிட் டொலிக்கமுன்னே, பெருமையுள சதிருடன் சங்கீத வாத்யம் பிறங்கவே யதிர்வெடிகளும்,—பார்கொண்ட வாணமத் தாப்போசை யெங்கணும் பரவித் தொனிக்கவடியார், பாங்குடன் சூழ்ந்தொளிரு ஞானவீ ரப்பநம் பரமகுரு வந்துவக்கப், பாங்காக வேயன்ன தானமொடு சொனனமும் பண்புட னீந்துமிக்க, பாக்கிய மடைந்தசந் தோஷமதை யென்றனாற் பகருதற் கெளிதாகுமோ. (78)

விரோதிகிருதுஹு

திருக்களர்.

சீர்கொள் விரோதிகிரு தாண்டினிற் சித்திரைத் தேதியிரு பத்திரண்டிற், றிகழ்குரு வாரமொடு பூர்வபட் சஞ்சஷ்டி சேர்ந்தபூரு

பூசதினமுஞ், சித்தயோ கமுமான மிதுனலக் கினமதிற் றென்ன வன் றேசத்திலே, செகமெலாம் புகழ்கோயி லூர்முத்து ராமலிங் கையன்மர பிற்றெளிந்த,—பேர்கொண்ட வீரப்ப ஞானதே சிகரிடம் பிரியமுள ராசப்பனோர், பெருமையுள முதலியார் சோழநன் ஞட் டிலே பெரிதாந் திருக்களரெனும், பேர்பெற்ற தலமொன்று கிலமாகி விட்டதாற் பேணிட வேண்டுமென்னப், பிரியமாய்க் கேட்டுமே சீரணோத் தாரணம் பெலமா நடத்தவுன்னித்,—தார்கொண்ட வணிகரின் பொருள்கொண்டு நற்பாரி சாதவ னேஸ்வரர்க்குந், தண்ணருள் செ யமுதவல் லீஸ்வரித் தாயோடு சான்றபரி வாரர்கட்குந், தகவான கர்ப்பக்கி ரகமொடு மண்டபஞ் சதிருற்ற திருமதில்களுந், தக்கபசு நிலைபாட சாலைநந் தனவனந் தகுகுள மடமுமாலும்,—ஏர்கொண்ட ரதமுதல் வாகன திகண்மிக்க வெழிலான வாபரணமும், இதமாமுடித்தட்ட பந்தன கும்பாபி டேகமு நாடாத்தியிரவி, லேற்றமுள வெள்ளிவிடை மீதினிற் கடவுளு மின்பமாய்ப் பவனிவரவே, யியல்பான வன்னபா னதியொடு சொன்னமு மீந்ததாச் சரியமாதோ. (79)

விரோதிகிருதுவரு

விருத்தாசலம்.

திருமேவு விரோதிகிரு தாண்டினிற் சித்திரைத் தேதியிரு பத்திரண்டிற், றிகழ்குரு வாரமொடு புனர்பூச நாளினிற் சேர்மிதுன லக்கினத்தே,—தருமேவு பாண்டிநன் ஞட்டினிற் றனவணிகர் தலமாம் விருத்தாசலந், தங்கிய விருத்தகிரி நாதரொடு பாலாம்பி கைபணி தகுதியாக,—அருள்மேவு சீரணோத் தாரணஞ் செய்தட்ட பந்தனத் தோடுகும்பா, வபிடேக முங்கொள நடத்தியன் றிரவிலே யடியார்கள் போற்றவையன்,—திருமேவு மம்மையொடு மிடபவாகனமதிற் சீருடன் பவனிவரவே, செய்துப சரித்ததைச் சேடனு நாவினுற் செப்புதற் கரிதாகுமே. (௮௦)

விரோதிகிருதுவருஷ

கம்பையூர்.

சீர்கொள் விரோதிகிரு தாண்டினிற் சிங்கமதி தேதிபிரு பத்தாறினிற், றென்னவன் றேசத்தி னன்னகர மாநாச்சி நகரில்வளர் செல்வருக்குள்,—தார்கொண்ட தனவணிக ருகுமுத் தையசெட்டி தகமையாங் கம்பையூரிற், சச்சிதா னந்தவடி வாஞ்சொக்க லிங்கரெந் தாய்கயற் கண்ணியமர்தற்,—ரேகர் கொண்ட பணியதைச் சீர்பெறச் செய்துமிக வெழிலுறப் புதியதாக்கி,யியல்பான வட்டபந் தனமோடு கும்பாபி டேகமு மியற்றியன்பாய்ப்,—பார்கொண்ட வுலகெலாம் போற்றிடும் படியதாய்ப் பஞ்சமூர்த் திகளுமிக்க, பவனிவலம் வந்திடச் செய்ததைச் சேடனும் பகருதற் கெளியதாமோ. (81)

விரோதிகிருதுவருஷ

திருக்கோவலூர்.

ஆனதொரு கலியுகம தையா யிரத்திநூ றொன்பதின் மூன்றதாக, அமருநல் விரோதிகிரு தாண்டினிற் றைதேதி யாறிரண் டுறுவியாழம், அதின்மேவு சுக்லபட் சஞ்சஷ்டி ரேவதி யமர்மீன லக்கினத்தில், ஆக்கமுள பாண்டிநன் னாட்டிலுறு தேவநக ரமர்கின்றமேனுவகை,—மானமுள பிரபுவாம் வைரவன் செட்டிகண் மணியென்னும் வள்ளல்நாட்டின், மகத்தான பெண்ணைநதி சூழ்திருக் கோவலூ ரென்னுமா க்ஷேத்திரத்தில், மகிமைவீ ராட்டகே சுரருடன் பிரஹன்ன நாயகி யம்மைபணியை, வானமுதல் நீக்கியே புதிதான கற்களால் மயனும் வியப்பதாகத்,—தானமாங் கர்ப்பக்கி ரகமுதல் மண்டபஞ் சகலமு மியற்றியன்பாந், தகமையா யட்டபந் தனமுதற் கும்பாபி டேகமுஞ் செய்துதக்க, தங்கமுக ஷெடுசுப்ரமணியவேள் தண்டிகே சுரருடன் சாமியம்மை, தாமவடி வாமிரிஷபவாகனந் தன்னிலே தரமுடன் பவனி வருகக்,—கானமுள வேதபாராயணம் மொருபாற் கணகணென வேயொலிக்கக், கனமான சங்கீதவாத்தியம் மொருபாற் கடலோசை போலொலிக்கக், காதலுடன் வந்தவர்க் கன்னமுஞ் சொன்னமுங் கவினுட னீந்ததான, காட்சியைக் காண்பதற் கநேகமா யிரம்விழிகள் கண்டிலன் பிரமன்மாதோ. ( )

பரிதாவிஹு

திருக்காளத்தி.

பார்மேவு மாங்கிலாண் டோரா யிரத்துத் தொளாயிரத் தாறிர ண்டிற், பரிதாவி வருடமதி லானசித் திரைதேதி யொன்பதிற் பா னுவாரம், பகரமர பட்சத்தி லுறுசதுர்த் தியுமிருக சிரிட நட்சத்தி ரம், பற்றியுள சுபதினந் தன்னிலே யுயர்வான பாண்டிநன் னூடி லுற்ற,—ஏர்மேவு தேவநகர் வாழ்கின்ற வணிகரி லீதலுள மேனு வகை, யியைந்துள விராமனு தச்செட்டி யருணு சலப்பிரபு வான விவர்க, ளின்பஞ்செய் கண்ணப்ப னுக்கருள் காளத்தி யீசரா மி றைவர் பணியோ, டேற்றமுள தாஞானப் பூங்கோதை யம்மையார் பணியும் பிரித்தகற்றிக்,—கார்மேவு கர்ப்பக்கி ரகமுத லர்த்தமண் டபமகா மண்டபங்கள், கதிர்மேவு சோபான மண்டபந் திருமதில் கண்டிடக் கல்லிழைத்துக், கணக்கிலாப் பொருளது கொடுத்துமே புதிதாக் கட்டியு மன்புபூண்டு, கனமான அட்டபந் தனமொடு கும்பாபி டேகமுஞ் செய்துகனிவாய்த்,—தார்மேவு தந்திமுக னெ டுகந்த வேளுடன் சண்டேசர் தாமும் வரவுந், தகைமையா யம்மை யோ டப்பனும் விடைமேற் றனித்தனி பவனிவரவுஞ், சற்பிரா மணர்களடி யார்களுக் கனமுஞ் சொன்னமுந் தரமதாகத், தாங்க ளே செய்துப சரிததைச் சேடனுஞ் சாற்றுதற் கெளியதாமோ.

பரிதாவிஹு

திருவாப்பனூர்.

சீர்பெருக்குந் திருவாப்ப னூர்த்திருவாய் புடைநாதச் செல்வ ருக்கும், ஆர்பெருக்குஞ் சுகந்தகுந்த ளாம்பிகைக்கும் பணிவணிக ரயைக்கச் செய்து,பார்தரிக்கும் பரிதாவி யாண்டதில்வை காசிபதின் மூன்றுந்தேதி, யேர்பெருக்கு ஞாயிறினிற் கும்பாபி டேகமது மிய ற்றி னரே. (83)

பரிதாவிஹு

கண்டனூர்.

பார்மேவுபரிதாவி வருஷம்வை காசிபதின் மூன்றெனுந் தேதிய தனிற், பண்பான ஞாயிறே காதசியோ டத்தநாட் பசரிடப லக்கின

த்தி,—லேர்மேவு காலையி லிரண்டுக்கு மேன்மூன்று நாழிகை யளவமைந்த, வியல்பான சுபதினந் தன்னிலே கண்டனூ ரேற்றமுள வணிகரூரார்,—நார்மேவு நந்தனார் வம்மிசத் தானவர்க ளுடோறும் வணங்கியேத்த, நாட்டமா யுறையளகை நாச்சியார் கோவிலை நற்புதுப் பணியதாக்கிச்,—சீர்மேவு மபிடேக மன்புடன் செய்வதாற் செகத்திலுள வடியரெல்லாஞ், சிறப்புடன் வந்துதரி சித்துமே வேண்டிய சித்தியைப் பெறுகமாதோ. (84)

பரிதாவிலும்

புதுவயல்.

பாரிற் சிறந்த பாண்டிநன் னாட்டி
லூரிற் சிறந்த புதுவய லுறையு
மன்புள ஆனாச் சூனாப் பானா
இன்புறும் விலாச வீரப்ப சீலன்
தனவைசி யர்கள் சைவம் வைணவம்
இனமாக் கொள்வ ரென்பது தோன்ற
அத்தன் கீட்டிசை அரிதான் மேற்றிசை
யெத்தலங் களினு மிருப்பதை யுன்னி
நம்ம தூரில் நாரா யணர்க்குச்
செம்மை யாகத் திருப்பணி மேற்றிசை
செய்குவ மென்று சிந்தையிற் கொண்டே
யுய்குவ தான வழியென் றுவந்து
கருதியுடனே கல்லா லமைத்தே
யருமையாய்ப் பகவான் றூயுட னமரப்
பரிதாவி வருடம் பாங்குள தையினி
லுரிமையாந் தேதி யெட்டிற் குகந்த
திங்கட் கிழமைத் தினமிருக சீரிடந்
தங்குறு மீன லக்கினத் தான
வுதய நாழிகை யொன்ப துக்குமேற்

பதினொன் றேகால் பகர்நா ழிகைக்குட்
சம்ரோ க்ஷணமெனத் தூக்க தகமைசேர்
கும்பாபி டேகங் குறிப்பாய் நடாத்திப்
பெருமைகொள் சுந்தர ராசப் பெருமாள்
கெருடவா கனத்திற் கெம்பீ ரத்துடன்
வந்திடப் பவனி வாணமந் தாப்பும்
விந்தையாத் தொனிக்க வேதபா ராயணம்
வரிசை வரிசையா வழங்கவே நல்ல
வுரிமையாக் கட்டிய சாலைக டோறும்
மறையவர் தமக்கும் வணிகர்க டமக்கு
முறையுள பெரியோர் முதலியர் பலர்க்கும்
வேண்டிய சாமான் விருப்பமா யமைத்தே
யுண்டி முதலிய வுபசா ரங்களும்
நடத்திய தான நன்மையை யுணர்ந்து
படத்தமர் சேடனும் பகருதற் கெளிதோ. (85)

சாதாரணஹூ

கண்டனூர்.

இந்நூ லச்சிட்டு முடிந்த பின் கிடைத்த கவிகள்.

தீதிலாச் சாதா ரணவரு டத்திற் சித்திரை மதிபத்தாந் தேதி
காதல்செய் சுக்கிர வாரமத் தத்திற் கண்டனூர் வணிகர்க ளன்பா
யாதியாஞ் சுந்த ரேசர்மீ னாட்சிக் கட்டபந் தனமது மியற்றி [தோ.
நீதியாக் கும்பாபிடேகமுஞ் செய்தநெறியையா னிகழ்த்துதற் கெளி

கலியுகம் 4955 ஆனந்தஹூ

கண்டனூர்.

ஆனந்த வருடத் தைப்பசி மாதந் தேதிபத் தொன்பதாம் வெள்ளி, தானந்த பூர்வ சதுர்த்திரே வதிநாட் டகைமையாஞ் சுந்தரேஸ்வரரை, யூனமி லுயர்வாங் கண்டனூர் வணிக ருவந்துமே தாபனஞ் செய்து, ஞானமெய்ப் பொருளுங் கொண்டிடக் கும்பா பிடேகமு நடத்தினர் மாதோ. (87)

முற்றிற்று.

உ

சிவமயம்.

புத்தக விளம்பரம்.

சிவாலய சீரணோத்தாரணவிதி	... ...	ரூ.	0—4—0
சற்குரு விளக்கம்	... ...	ரூ.	0—4—0
தனவைசிய வைதிகசைவாநுஷ்டான விளக்கம்		ரூ.	0—4—0
கும்பாபிடேகக் கவித்திரட்டு	... ...	ரூ.	0—4—0
நாட்டுக்கோட்டை நகரத்தார் கலியாணச் சடங்கு விளக்கம்	...	ரூ.	0—4—0
கோவிலூர்க் கும்பாபிடேகப் புத்தகம்	...	ரூ.	0—2—0
சூரனை வென்ற சரித்திரம்	... ...	ரூ.	0—2—0
மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் கப்பற் சிந்து	...	ரூ.	0—4—0
சமணர்களை வாதில் வென்ற சரித்திரம்	...	ரூ.	0—2—0
மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் கலியாணப்பாட்டு	...	ரூ.	0—2—0
ஊர்த்ததாண்டவம்	... ...	ரூ.	0—2—0
திருவாதிரை மகோற்சவச் சிறப்பு	... ...	ரூ.	0—2—0

இவைகளுக்குத் தபாற்கூலி வேறு.

மேற்கண்ட புத்தகங்கள் வேண்டுவோர் குன்னக்குடி மேல மடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்

நா. பெ. நா. மு. முத்துராமையா.

கண்டனூர்.
